# 12th Science Lesson 15 Questions in Tamil

## 15] உயிரிய பல்வகைத்தன்மை மற்றும் அதன் பாதுகாப்பு

1. IUCN சிவப்பு பட்டியலில் உள்ள விலங்கு _____________

A) காட்டுப்பூனை

B) மலையாடு

C) முயல்

**D) நீலகிரி வரையாடு**

**விளக்கம்: நீலகிரி வரையாடு அழியும் நிலையில் உள்ள விலங்காகும். அத்து மீறி நுழைந்து திருடுவதாலும் மற்றும் அதிகமாக வேட்டையாடப்படுவதாலும் அழியும் நிலையில் உள்ள விலங்கு என்று சிவப்பு பட்டியலில் IUCN வெளியிட்டுள்ளது.**

2. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] 1991 ல் ஐ.நா.வில் நடந்த புவி உச்சிமாநாடு நடைபெற்றது.

2] இம்மாநாட்டில் நிலம், கடல், பிற நீர் சூழ்நிலை மண்டலங்கள் மற்றும் தாங்கள் பங்கு கொள்கின்ற சூழலியல் கூட்டுத்தொகுதி உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களிலிருந்தும் வருகின்ற உயிரினங்களிடையே காணப்படும் வேறுபாடுகளே உயிரியப் பல்வகைத்தன்மை என வரையறுக்கப்பட்டது.

A) 1, 2 சரி

**B) 1 தவறு 2 சரி**

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1992ல் ஐ.நா.வில் நடந்த புவி உச்சி மாநாட்டில் நிலம், கடல், பிற நீர் சூழ்நிலை மண்டலங்கள் மற்றும் தாங்கள் பங்கு கொள்கின்ற சூழலியல் கூட்டுத்தொகுதி உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களிலிருந்தும் வருகின்ற உயிரினங்களிடையே காணப்படும்வேறுபாடுகளே உயிரியப் பல்வகைத்தன்மை என வரையறுக்கப்பட்டது.**

3. உயிரிய பல்வகைத்தன்மை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் _____________

A) ஸ்டீபன் ரோசன்

B) கார்லின் வால்டர்

C) ஸ்டீபன் ரோசல்

**D) வால்டர் ரோசன்**

**விளக்கம்: உயிரிய பல்வகைத்தன்மை என்ற சொல்லை வால்டர் ரோசன் என்பவர் 1986ல் அறிமுகப்படுத்தினார்.**

4. பலதரப்பட்ட உயிரினங்களின் தொகுப்பே _____________

A) மரபியல் பல்வகைத்தன்மை

B) சிற்றின பல்வகைத்தன்மை

C) பேரின பல்வகைத்தன்மை

**D) உயிரிய பல்வகைத்தன்மை**

**விளக்கம்: பலதரப்பட்ட உயிரினங்களின் தொகுப்பே உயிரிய பல்வகைத்தன்மை ஆகும்.**

5. வெப்ப மண்டலப் பகுதியிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லச் செல்ல ஒரு அலகு பரப்பிலுள்ள சிற்றினங்களின் எண்ணிக்கை_____________

A) அதிகரிக்கிறது

**B) குறைகிறது**

C) மிக குறைவு

D) மிக அதிகம்

**விளக்கம்: வெப்ப மண்டலப் பகுதியிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லச் செல்ல ஒரு அலகு பரப்பிலுள்ள சிற்றினங்களின் எண்ணிக்கை குறைகிறது.**

6. உயிரிய பல்வகைத்தன்மை என்ற சொல்லை பிரபலப்படுத்தியவர் _____________

A) ஸ்டீபன் ரோசன்

**B) எட்வர்ட் வில்சன்**

C) ஸ்டீபன் ரோசல்

D) வால்டர் ரோசன்

**விளக்கம்: இனக்கூட்டம் (Population) முதல் உயிர்த்தொகை (Biome) வரையிலான அனைத்து அடுக்குகளில் உள்ள உயரிய அமைப்புகளின் வேறுபாட்டை விளக்குவதற்காக, உயிரிய பல்வகைத்தன்மை என்ற சொல்லை எட்வர்ட் வில்சன் என்பவர் பிரபலப்படுத்தினார்.**

7. உயிரியப் பல்வகைமைத்தன்மையில் மூன்று அடுக்குகள் அல்லாதது யாவை?

A) மரபியல் பல்வகைத்தன்மை

B) சிற்றின பல்வகைத்தன்மை

C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை

**D) பேரின பல்வகைத்தன்மை**

**விளக்கம்: உயிரியப் பல்வகைமைத்தன்மையில் மூன்று அடுக்குகள் உள்ளன. அவை மரபியல் பல்வகைத்தன்மை, சிற்றின பல்வகைத்தன்மை, சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை.**

8. கூற்று(A): ஒரே சிற்றினத்தின் வெவ்வேறு இனக்கூட்டத்துக்கிடையிலான மரபியல் வேறுபாடுகள் ஆகியவற்றைக் பல்வகைத்தன்மை குறிக்கிறது.

காரணம்(R): இந்த பல்வகைத்தன்மை மரபியல் பல்வகைத்தன்மை எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: வேறுபட்ட சிற்றினங்களுக்கிடையே மரபியலமைப்பு ரீதியான வேறுபாடு (எண்ணிக்கை மற்றும் மரபணுக்களின் வகைகள்), ஒரு சிற்றினத்துக்குள்ளே காணப்படும் மரபியல் அமைப்பில் உள்ள வேறுபாடுகள், ஒரே சிற்றினத்தின் வெவ்வேறு இனக்கூட்டத் துக்கிடையிலான மரபியல் வேறுபாடுகள் ஆகியவற்றைக் குறிப்பது மரபியல் பல்வகைத்தன்மை எனப்படும்.**

9. ஒரு சிற்றினத்தின் மரபணு வேறுபாடுகள், _____________ மற்றும் வாழிடங்களை பொறுத்து அதிகரிக்கிறது.

A) பல்வகைத்தன்மையின் வேறுபாடு

B) பல்வகைத்தன்மையின் இனம்

C) பல்வகைத்தன்மையின் மரபணு

**D) பல்வகைத்தன்மையின் அளவு**

**விளக்கம்: ஒரு சிற்றினத்தின் மரபணு வேறுபாடுகள், பல்வகைத்தன்மையின் அளவு மற்றும் வாழிடங்களை பொறுத்து அதிகரிக்கிறது.**

10. ராவோல்ஃபியா வோமிட்டேரியா என்னும் மூலிகைத் தாவரத்தில் _____________என்னும் செயல்திறனுள்ள உட்பொருள் காணப்படுகின்றன.

A) ராவோல்பைன்

B) டேரியாரிசர்

C) ரிசர்ஃபியா

**D) ரிசர்பைன்**

**விளக்கம்: இமய மலையின் பல்வேறு பகுதிகளில் வளரும் ராவோல்ஃபியா வோமிட்டேரியா என்னும் மூலிகைத் தாவரத்திலுள்ள ரிசர்பைன் என்னும் செயல்திறனுள்ள உட்பொருளின் அடர்த்தியிலும் ஆற்றலிலும் மரபியல் பல்வகைத்தன்மையின் காரணமாக வேறுபாடுகள் காணப்படுகின்றன.**

11. ஒரு வாழிடத்தில் உள்ள சிற்றின வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் செழுமை ஆகியவை _____________ எனப்படும்.

A) மரபியல் பல்வகைத்தன்மை

**B) சிற்றின பல்வகைத்தன்மை**

C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை

D) பேரின பல்வகைத்தன்மை

**விளக்கம்: ஒரு வாழிடத்தில் உள்ள சிற்றின வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் செழுமை ஆகியவை சிற்றின பல்வகைத்தன்மை எனப்படும்.**

12. ஒரு அலகு பரப்பளவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காணப்படும் சிற்றினங்களின் எண்ணிக்கை _____________

A) மரபியல் செழுமை

**B) சிற்றினச்செழுமை**

C) சமூக/சூழ்நிலை மண்டல செழுமை

D) பேரின செழுமை

**விளக்கம்: ஒரு அலகு பரப்பளவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காணப்படும் சிற்றினங்களின் எண்ணிக்கை சிற்றினச்செழுமை எனப்படும்.**

13. கிழக்குத் தொடர்ச்சி மலைகளை விட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் _____________ சிற்றினங்களின் எண்ணிக்கை அதிகம்.

A) ஊர்வன

B) முதுகெலும்பி

C) பாலூட்டிகள்

**D) இருவாழ்வி**

**விளக்கம்: கிழக்குத் தொடர்ச்சி மலைகளை விட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருவாழ்வி சிற்றினங்களின் எண்ணிக்கை அதிகம்.**

14. சிற்றின மண்டல பல்வகைத்தன்மை மூன்று பிரிவுகள் அல்லாதவை எவை?

A) ஆல்பா பல்வகைத்தன்மை

B) பீட்டா பல்வகைத்தன்மை

C) காமா பல்வகைத்தன்மை

**D) டெல்டா பல்வகைத்தன்மை**

**விளக்கம்: சிற்றின மண்டல பல்வகைத்தன்மை மூன்று பிரிவுகளாவன i. ஆல்பா பல்வகைத்தன்மை, ii. பீட்டா பல்வகைத்தன்மை மற்றும் iii. காமா பல்வகைத்தன்மை ஆகும்.**

15. கூற்று(A): ஒரு குறிப்பிட்ட பகுதி, சமுதாயம் அல்லது சூழ்நிலை மண்டலத்தில் வாழும் வகைபாட்டுத் தொகுதிகளின் (பெரும்பாலும் சிற்றினங்களின்) எண்ணிக்கையை வைத்து அளவிடப்படுகிறது.

காரணம்(R): இது பீட்டா பல்வகைத்தன்மை எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

**B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல**

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

**விளக்கம்: ஆல்பா பல்வகைத்தன்மை ஒரு குறிப்பிட்ட பகுதி, சமுதாயம் அல்லது சூழ்நிலை மண்டலத்தில் வாழும் வகைபாட்டுத் தொகுதிகளின் (பெரும்பாலும் சிற்றினங்களின்) எண்ணிக்கையை வைத்து அளவிடப்படுகிறது.**

16. புவியில் உள்ள அனைத்து வாழிடங்களுக்கிடையேயான வேறுபாடுகளை குறிப்பது _____________

A) ஆல்பா பல்வகைத்தன்மை

B) பீட்டா பல்வகைத்தன்மை

**C) காமா பல்வகைத்தன்மை**

D) டெல்டா பல்வகைத்தன்மை

**விளக்கம்: காமா பல்வகைத்தன்மை மொத்த நிலப்பரப்பு அல்லது புவியில் உள்ள அனைத்து வாழிடங்களுக்கிடையேயான வேறுபாடுகளை குறிக்கிறது.**

17. அருகருகே உள்ள இரண்டு சூழ்நிலை மண்டலங்களுக்கிடையே யான சிற்றின பல்வகைத்தன்மை _____________

A) ஆல்பா பல்வகைத்தன்மை

**B) பீட்டா பல்வகைத்தன்மை**

C) காமா பல்வகைத்தன்மை

D) டெல்டா பல்வகைத்தன்மை

**விளக்கம்: பீட்டா பல்வகைத்தன்மை அருகருகே உள்ள இரண்டு சூழ்நிலை மண்டலங்களுக்கிடையே யான சிற்றின பல்வகைத்தன்மையாகும்.**

18. சூழ்நிலை மண்டலங்களிலுள்ள தனித்தன்மை வாய்ந்த சிற்றினங்களின் எண்ணிக்கையை ஒப்பீடு செய்வதன் மூலம் பெறப்படுவது_____________

A) ஆல்பா பல்வகைத்தன்மை

**B) பீட்டா பல்வகைத்தன்மை**

C) காமா பல்வகைத்தன்மை

D) டெல்டா பல்வகைத்தன்மை

**விளக்கம்: பீட்டா பல்வகைத்தன்மை அச்சூழ்நிலை மண்டலங்களிலுள்ள தனித்தன்மை வாய்ந்த சிற்றினங்களின் எண்ணிக்கையை ஒப்பீடு செய்வதன் மூலம் பெறப்படுகிறது.**

19. உயிரிய சமுதாயங்கள் மற்றும் உயிர்கோளத்தின் சுற்றுச்சூழல் செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகளைக் குறிப்பது_____________

A) மரபியல் பல்வகைத்தன்மை

B) சிற்றின பல்வகைத்தன்மை

**C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை**

D) பேரின பல்வகைத்தன்மை

**விளக்கம்: சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை உயிரிய சமுதாயங்கள் மற்றும் உயிர்கோளத்தின் சுற்றுச்சூழல் செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகளைக் குறிக்கும்.**

20. உணவூட்ட சுழற்சி, உணவு வலை, ஊட்டமட்டங்கள் காணப்படுவது _____________

A) மரபியல் பல்வகைத்தன்மை

B) சிற்றின பல்வகைத்தன்மை

**C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை**

D) பேரின பல்வகைத்தன்மை

**விளக்கம்: உணவூட்ட சுழற்சி, உணவு வலை, ஆற்றல் ஓட்டம் மற்றும் பல உயிரியல் உள்வினைகள் போன்ற சூழ்நிலைக் கூறுகள், ஊட்டமட்டங்கள்** (trophic levels) **மற்றும் சுற்றுச்சூழல் செயல்முறைகளின்**

**பல்வகைத்தன்மையால் சூழ்நிலை மண்டல அளவில் காணப்படும் பல்வகைத்தன்மை சூழ்நிலை மண்டலம் பல்வகைத்தன்மை எனப்படும்.**

21. அல்பைன் புல்வெளிகள் காணப்படுவது _____________

A) பாகிஸ்தான்

B) வங்காளதேசம்

C) இலங்கை

**D) இந்தியா**

**விளக்கம்: அல்பைன் புல்வெளிகள், மழைக்காடுகள், சதுப்பு நிலங்கள், பவளப்பாறைகள், புல்வெளிகள் மற்றும் பாலைவனங்கள் ஆகியவற்றைக் கொண்ட உலகின் மிகச்சிறந்த சுற்றுச்சூழல் பல்வகைத்தன்மையை கொண்ட ஒரு நாடாக இந்தியா விளங்குகிறது.**

22. கூற்று(A): ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரையறுக்கப்பட்ட நேரத்தில் காணப்படும் உயிரினங்களின் எண்ணிக்கையை கொண்டு உயிரிய பல்வகைத்தன்மையை அளவிடலாம்.

காரணம்(R): இந்த பல்வகைத்தன்மையைஉயிரிய பல்வகைத்தன்மை எனலாம்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரையறுக்கப்பட்ட நேரத்தில் காணப்படும் உயிரினங்களின் எண்ணிக்கையை கொண்டு உயிரிய பல்வகைத்தன்மையை அளவிடலாம்.**

23. பூமியில், காணப்படும் பல்வேறு சிற்றினங்களின் தற்போதைய மதிப்பீடு சுமார் _____________ ஆகும்.

A) 7–9 மில்லியன்

B) 8–10 மில்லியன்

C) 8–11 மில்லியன்

**D) 8–9 மில்லியன்**

**விளக்கம்: பூமியில், காணப்படும் பல்வேறு சிற்றினங்களின் தற்போதைய மதிப்பீடு சுமார் 8–9 மில்லியன் ஆகும்.**

24. கூற்று(A): நம் இயற்கை செல்வத்தின் சரியான பரிமாணம், நமக்குத் துல்லியமாக, தெரியாது.

காரணம்(R): இதுவே "வகைபாட்டியலின் இடையூறு" எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: நம் இயற்கை செல்வத்தின் சரியான பரிமாணம், நமக்குத் துல்லியமாக, தெரியாது. இதுவே "வகைபாட்டியலின் இடையூறு" எனப்படும்.**

25. பொலியார்டிக் மற்றும் இந்தோ–மலேயன் ஆகிய இரண்டு முக்கிய ஆட்சியெல்லைப் (realms) பகுதிகள் மற்றும் மூன்று உயிரினத் தொகையின் பிரநிதியாகவும் உள்ள நாடு _____________

A) பாகிஸ்தான்

B) வங்காளதேசம்

C) இலங்கை

**D) இந்தியா**

**விளக்கம்: உலக உயிரிய புவியமைப்பு வகைபாட்டின் படி பொலியார்டிக் மற்றும் இந்தோ–மலேயன் ஆகிய இரண்டு முக்கிய ஆட்சியெல்லைப் (realms) பகுதிகள் மற்றும் வெப்ப மண்டல சதுப்புநிலக்காடுகள், வெப்ப மண்டல வறண்ட இலையுதிர் காடுகள் மற்றும் வெப்பப் பாலைவனங்கள் / அரைப் பாலைவனம் என மூன்று உயிரினத் தொகையின் பிரநிதியாகவும் இந்தியா உள்ளது.**

26. உலகின் மொத்த நிலப்பரப்பில்_____________ மட்டுமே இந்தியா கொண்டுள்ளது.

A) 2.2%

**B) 2.4%**

C) 2.3%

D) 2.5%

**விளக்கம்: உலகின் மொத்த நிலப்பரப்பில் 2.4% மட்டுமே இந்தியா கொண்டுள்ளது.**

27. உலகின்_____________ க்கும் மேலாக விலங்கின சிற்றினங்கள் இந்தியாவில் உள்ளன.

A) 6%

**B) 8%**

C) 7%

D) 9%

**விளக்கம்: உலகின் 8% க்கும் மேலாக விலங்கின சிற்றினங்கள் இந்தியாவில் உள்ளன. இவ்விழுக்காட்டில் உலகம் அறிந்த 92,000 சிற்றினங்கள் அடங்கும்.**

28. நிலப்பரப்பின் அடிப்படையில் இந்தியா உலகின்_____________ வது பெரிய நாடாகும்.

A) 6

B) 5

**C) 7**

D) 8

**விளக்கம்: நிலப்பரப்பின் அடிப்படையில் இந்தியா உலகின் ஏழாவது பெரிய நாடாகும்.** .

29. _____________ உயிரிய மிகைப் பல்வகைத்தன்மை கொண்ட உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

A) 16

B) 15

C) 18

**D) 17**

**விளக்கம்: உயிரிய மிகைப் பல்வகைத்தன்மை கொண்ட உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.**

30. தனித்தன்மைமிக்க வாழிடங்கள் மற்றும் உயிரினங்களைக் கொண்ட_____________ உயிர் புவி மண்டலங்கள் இந்தியாவில் உள்ளன.

A) 11

B) 12

**C) 10**

D) 13

**விளக்கம்: தனித்தன்மைமிக்க வாழிடங்கள் மற்றும் உயிரினங்களைக் கொண்ட பத்து உயிர் புவி மண்டலங்கள் இந்தியாவில் உள்ளன.**

31. "உலகின் தற்போதைய உயிரியப் பல்வகைத்தன்மை மிக வேகமாக அழிந்து வருகிறது. இது இதற்கு முன்னால் பூமியின் வரலாற்றில் நடந்த ஐந்து அல்லது ஆறு பேரழிவுவோடு ஒப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது" என கூறியது _____________

A) உலக வனவிலங்கு வாரியம்

B) உலக வனவிலங்கு அமைப்பு

C) உலக வனவிலங்கு கழகம்

**D) உலக வனவிலங்கு நிதியம்**

**விளக்கம்: "உலகின் தற்போதைய உயிரியப் பல்வகைத்தன்மை மிக வேகமாக அழிந்து வருகிறது. இது இதற்கு முன்னால் பூமியின் வரலாற்றில் நடந்த ஐந்து அல்லது ஆறு பேரழிவுவோடு ஒப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது". –உலக வனவிலங்கு நிதியம்.**

32. வாழிடங்களின் தன்மைகளை நிலங்களின் பரப்பு_____________ ஆகியவை தீர்மானிக்கின்றன.

A) கடலின் பரப்பு

B) நிலத்தின் வெப்பநிலை

C) கடல் மட்டத்திலிருந்து அவற்றின் வெப்பநிலை

**D) கடல் மட்டத்திலிருந்து அவற்றின் உயரம்**

**விளக்கம்: வாழிடங்களின் தன்மைகளை நிலங்களின் பரப்பு மற்றும் கடல் மட்டத்திலிருந்து அவற்றின் உயரம் ஆகியவை தீர்மானிக்கின்றன.**

33. பல்வகைத்தன்மை பரவலின் பாங்கினை நிர்ணயிக்கும் காரணிகள் அல்லாதது எது?

A) வெப்பநிலை

B) மழைப்பொழிவு

C) நிலநடுக்கோட்டிலிருந்து தூரம்

**D) கடல் மட்டத்திலிருந்து அதன் வெப்பநிலை**

**விளக்கம்: வெப்பநிலை, மழைப்பொழிவு, நிலநடுக்கோட்டிலிருந்து தூரம் (பரப்பு சரிவு வாட்டம்) கடல் மட்டத்திலிருந்து அதன் உயரம் (உயரடுக்கு சரிவு வாட்டம் ) ஆகியவை பல்வகைத்தன்மை பரவலின் பாங்கினை நிர்ணயிக்கும் சில காரணிகளாகும்.**

34. _____________ பல்வகைத்தன்மையில் மிக முக்கியமானது பரவல் பரப்பு சார்ந்த பல்வகைத்தன்மையாகும்.

A) மரபியல் பல்வகைத்தன்மை

B) சிற்றின பல்வகைத்தன்மை

C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை

**D) உயிரிய பல்வகைத்தன்மை**

**விளக்கம்: உயிரிய பல்வகைத்தன்மையில் மிக முக்கியமானது பரவல் பரப்பு சார்ந்த பல்வகைத்தன்மையாகும்.**

35. வெப்ப மண்டலப் பகுதிகளில் குறிப்பாக _____________ மற்றும்_____________ ஆகிய அட்சகோடுகளுக்கு இடையிலான பகுதிகள் பல்வகைத்தன்மையின்புகலிடமாகத்திகழ்கின்றன.

A) 23. 5° S மற்றும் 23. 5° N

B) 23. 5° N மற்றும் 23. 5° N

C) 23. 5° S மற்றும் 23. 5° S

**D) 23. 5° N மற்றும் 23. 5° S**

**விளக்கம்: துருவ மற்றும் மித வெப்ப மண்டலங்களை விட வெப்ப மண்டலப் பகுதிகளில் குறிப்பாக 23.5o N மற்றும் 23.5o S ஆகிய அட்சகோடுகளுக்கு இடையிலான (கடக ரேகை மற்றும் மகர ரேகை – Tropic of cancer and Tropic of capricon) பகுதிகள் பல்வகைத்தன்மையின்புகலிடமாகத்திகழ்கின்றன.**

36. நிலநடுக்கோட்டுக்கு (0°) அருகில் உள்ள நாடு_____________

A) அமெரிக்கா

B) கிரீன்லாந்து

C) நியூஸிலாந்து

**D) கொலம்பியா**

**விளக்கம்: நிலநடுக்கோட்டுக்கு (0°) அருகில் உள்ள கொலம்பியாவில் ஏறத்தாழ 1400 பறவை இனங்கள் உள்ளன.**

37. 41° N ல் உள்ள பகுதி_____________

**A) நியூயார்க்**

B) கிரீன்லாந்து

C) நியூஸிலாந்து

D) கொலம்பியா

**விளக்கம்: 41° N ல் உள்ள நியூயார்க் பகுதியில் 105 இனங்கள் உள்ளன.**

38. 71° N ல் உள்ள நாடு _____________

A) நியூயார்க்

**B) கிரீன்லாந்து**

C) நியூஸிலாந்து

D) கொலம்பியா

**விளக்கம்: கிரீன்லாந்தில் 71° N ல் 56 இனங்கள் உள்ளன.**

39. பரப்பு பரவல் _____________ அதிகரிக்கிறது.

A) மரபியல் பல்வகைத்தன்மை

**B) சிற்றின பல்வகைத்தன்மை**

C) சமூக/சூழ்நிலை மண்டல பல்வகைத்தன்மை

D) உயிரிய பல்வகைத்தன்மை

**விளக்கம்: பரப்பு பரவல் சிற்றின பல்வகைத்தன்மையை அதிகரிக்கிறது என்பது தெளிவாகிறது.**

40. கடல் மட்டத்திற்கு மேல் ஒவ்வொரு கி. மீ க்கும்_____________ வீதம் வெப்பம் குறைகின்றது.

A) 6.4° C

B) 7.5° C

C) 7.6° C

**D) 6.5° C**

**விளக்கம்: சராசரியாக கடல் மட்டத்திற்கு மேல் ஒவ்வொரு கி. மீ க்கும் 6.5° C வீதம் வெப்பம் குறைகின்றது.**

41. பூமியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெருங்கடல்களின் மேற்பரப்பின் சராசரி நிலை_____________

A) சராசரி கடல் உயரம்

B) சராசரி கடல் பரவல்

C) சராசரி கடல் நீளம்

**D) சராசரி கடல் மட்டம்**

**விளக்கம்: சராசரி கடல் மட்டம் (Mean Sea level–MSL) என்பது பூமியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெருங்கடல்களின் மேற்பரப்பின் சராசரி நிலையாகும்.**

42. ஈரோடு சந்திப்பு சராசரி கடல் மட்டத்திற்கு மேலே_____________ மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

A) 171.90

B) 173.91

C) 172.91

**D) 171.91**

**விளக்கம்: ஈரோடு சந்திப்பு சராசரி கடல் மட்டத்திற்கு மேலே 171.91 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.**

43. வெப்பமண்டல பகுதிகளில் _____________ முதல்_____________ வரை வெப்பநிலை நிலவுகிறது.

A) 22° C முதல் 33° C

**B) 25° C முதல் 35° C**

C) 23° C முதல் 33° C

D) 24° C முதல் 36° C

**விளக்கம்: வெப்பமண்டல பகுதிகளில் 25° C முதல் 35° C வரை வெப்பநிலை நிலவுகிறது. இந்த வெப்ப நிலை, உயிரினங்களின் பெரும்பாலான வளர்ச்சிதை மாற்றங்கள் எளிதாகவும் மற்றும் அதிதிறனுடனும் செயல்பட உதவுகின்றது.**

44. வெப்பமண்டல பகுதிகளில் ஆண்டுக்கு_____________ மி.மீக்கும் அதிகமாக மழை பெய்கிறது.

A) 100 மி.மீ

**B) 200 மி.மீ**

C) 300 மி.மீ

D) 250 மி.மீ

**விளக்கம்: வெப்பமண்டல பகுதிகளில் பெரும்பாலும், ஆண்டுக்கு 200 மி.மீக்கும் அதிகமாக மழை பெய்கிறது.**

45. வெப்பமண்டல பகுதிகளில் உயிரிய பல்வகைத்தன்மையின் செழுமைக்கான காரணங்கள் யாவை?

1] நிலநடுக்கோட்டின் இருபுறங்களிலும் உள்ள கடகரேகைக்கும் மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் உயிரினங்கள் வாழ இணக்கமான வாழிடங்கள் உள்ளன.

2] ஊட்டச்சத் து மற்றும் அதிக வளங்கள் கிடைக்கின்றன.

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: வெப்பமண்டல பகுதிகளில் உயிரிய பல்வகைத்தன்மையின் செழுமைக்கான காரணங்கள்: நிலநடுக்கோட்டின் இருபுறங்களிலும் உள்ள கடகரேகைக்கும் மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் உயிரினங்கள் வாழ இணக்கமான வாழிடங்கள் உள்ளன. ஊட்டச்சத் து மற்றும் அதிக வளங்கள் கிடைக்கின்றன.**

46. வெப்பமண்டல பகுதிகளில் உயிரிய பல்வகைத்தன்மையின் செழுமைக்கான காரணங்கள் யாவை?

1] காலநிலை, பருவங்கள், வெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஆகியவை ஏறக்குறைய நிலை யாக இருப்பதால் உயிரினங்களில் வேற்றுமைத் தன்மையையும் எண்ணிக்கையையும் உயர்த்த உதவுகின்றன.

2] வெப்ப மண்டலங்களில் உள்ள சூழ்நிலைக் கூறுகள் சிற்றினமாக்கலுக்கு மட்டுமல்லாமல் உயிரினங்களின் எண்ணிக்கை மற்றும் வேற்றுமைத் தன்மையை அதிகரிக்கவும் ஏதுவாக உள்ளன.

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: வெப்பமண்டல பகுதிகளில் உயிரிய பல்வகைத்தன்மையின் செழுமைக்கான காரணங்கள்: காலநிலை, பருவங்கள், வெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஆகியவை ஏறக்குறைய நிலை யாக இருப்பதால் உயிரினங்களில் வேற்றுமைத் தன்மையையும் எண்ணிக்கையையும் உயர்த்த உதவுகின்றன. வெப்ப மண்டலங்களில் உள்ள சூழ்நிலைக் கூறுகள் சிற்றினமாக்கலுக்கு மட்டுமல்லாமல் உயிரினங்களின் எண்ணிக்கை மற்றும் வேற்றுமைத் தன்மையை அதிகரிக்கவும் ஏதுவாக உள்ளன.**

47. " ரிவட் பாப்பர்" கருதுகோளை" வெளியிட்டவர்_____________

A) பால் லிச்

B) லிச்எர்

C) எர்லிச்

**D) பால் எர்லிச்**

**விளக்கம்: ஒரு சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படும் சிற்றினங்களின் இழப்பால் ஏற்படும் விளைவை புரிந்துகொள்ள சூழியல் வல்லுநர் பால் எர்லிச்" ரிவட் பாப்பர்" கருதுகோளை" (Rivet Popper Hypothesis) வெளியிட்டார்.**

48. சிற்றினங்களுக்கும் நில பரப்புக்குமான தொடர்பு வெளியிட்டவர்_____________

A) பால் லிச் ஃபோன்

B) லிச்எர் ஹம்போல்ட்

**C) அலெக்சாண்டர் ஃபோன் ஹம்போல்ட்**

D) அலெக்சாண்டர் பால் ஹம்போல்ட்

**விளக்கம்: ஜெர்மனியை சேர்ந்த இயற்கையியலாளர் மற்றும் புவியியல் ஆர்வலருமான அலெக்சாண்டர் ஃபோன் ஹம்போல்ட்சிற்றினங்களுக்கும் நில பரப்புக்குமான தொடர்பை வெளியிட்டார்.**

49. சிற்றினத்திற்கும் மற்றும் நிலப்பரப்பிற்கும் உள்ள தொடர்பின் மடக்கை அளவுகோல்_____________

A) logZ = log C+ S log A

B) logS = log C+ Z log A

**C) logS = log C+ S log A**

D) logS = log B+ Z log A

**விளக்கம்: சிற்றினத்திற்கும் மற்றும் நிலப்பரப்பிற்கும் உள்ள தொடர்பின் மடக்கை அளவுகோல் logS = log C+ Z log A**

50. Z ன் மதிப்பு_____________

**A) 0.2 – 0.1**

B) 0.2 – 0.4

C) 0.2 – 0.3

D) 0.1 – 0.2

**விளக்கம்: வகைப்பாட்டியல் குழு அல்லது மண்டலங்களுக்கு அப்பாற்பட்டு தொடர்பு போக்குக் கெழு எண் Z, பொதுவாக 0.2 – 0.1 வரையிலான மதிப்பை கொண்டிருக்கும்.**

51. பல்வேறு கண்டங்களில் உள்ள வெப்ப மண்டல காடுகளின் பழம் உண்ணும் பறவைகள் மற்றும் பாலூட்டிகளின் குத்து சாய்வுக் கோட்டின் Z–மதிப்பு_____________

A) 1.05

B) 1.16

**C) 1.15**

D) 1.20

**விளக்கம்: பல்வேறு கண்டங்களில் உள்ள வெப்ப மண்டல காடுகளின் பழம் உண்ணும் பறவைகள் மற்றும் பாலூட்டிகளின் குத்து சாய்வுக் கோட்டின் Z–மதிப்பு 1.15 ஆகும்.**

52. உயிரிய பல்வகைத்தன்மையின் முக்கியத்துவத்தை அளவீடு செய்வது_____________

A) சூழ்நிலை மண்டல சேவைகள்

B) உயிரிய வளங்கள்

C) உயிரிய பல்வகைத்தன்மையின் சமூகப்பயன்கள்

**D) இவை அனைத்தும்**

**விளக்கம்: உயிரிய பல்வகைத்தன்மையின் முக்கியத்துவத்தை கீழ்க்கண்ட கோணத்தில் நோக்கி அதனை அளவீடு செய்யலாம்.i) சூழ்நிலை மண்டல சேவைகள் ii) உயிரிய வளங்கள் மற்றும் iii) உயிரிய பல்வகைத்தன்மையின் சமூகப்பயன்கள்**

53. ஒரு சிங்கத்தின் தனிப்பட்ட வாழிட பரப்பின் தேவை_____________

A) 1500 சதுர.கி.மீ

**B) 100 சதுர.கி.மீ**

C) 90 சதுர.கி.மீ

D) 110 சதுர.கி.மீ

**விளக்கம்: ஒரு சிங்கத்தின் தனிப்பட்ட வாழிட பரப்பின் தேவை 100 சதுர.கி.மீ ஆகும்.**

54. உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் யாவை?

1] வாழிட இழப்பு, காடுகள் துண்டாடப்படுதல் மற்றும் அழித்தல்

2] சுற்றுச்சூழல் மாசுறுதல் மற்றும் மாசுபடுத்திகள்

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு: 1. வாழிட இழப்பு, காடுகள் துண்டாடப்படுதல் மற்றும் அழித்தல் (ஏறத்தாழ 73% அனைத்துசிற்றினங்களையும் பாதிக்கிறது) 2. சுற்றுச்சூழல் மாசுறுதல் மற்றும் மாசுபடுத்திகள் (புகைபனி, தீங்குயிர்க்கொல்லிகள், களைக்கொல்லிகள், எண்ணெய் கசிவுகள், பசுமைஇல்லவாயுக்கள்)**

55. உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் யாவை?

1] தட்பவெப்பநிலை மாற்றம்

2] வெளிநாட்டு சிற்றினங்களை அறிமுகப்படுத்துதல்

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு: 1. தட்பவெப்பநிலை மாற்றம் 2. வெளிநாட்டு சிற்றினங்களை அறிமுகப்படுத்துதல்.**

56. உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் யாவை?

1] வளங்கள் அதிகமாக சுரண்டப்படுதல்

2] தீவிர வேளாண்மை, நீருயிரி வளர்ப்பு நடைமுறைகள்

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு: 1. வளங்கள் அதிகமாக சுரண்டப்படுதல் (ஆக்கிரமிப்பு, மரங்களை வரையறையின்றி வெட்டுதல், மிகை மீன்பிடிப்பு, வேட்டையாடல், சுரங்கங்கள்) 2. தீவிர வேளாண்மை, நீருயிரி வளர்ப்பு நடைமுறைகள்.**

57. உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் யாவை?

1] உள்ளூர் இனங்களுடன் வெளிஇனங்களை இணைத்து கலப்பினம் உருவாக்குவதால் உள்ளூர் இனங்கள் அழிதல்.

2] இயற்கை பேரழிவுகள்.

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: உயிரியப் பல்வகைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு: 1. உள்ளூர் இனங்களுடன் வெளிஇனங்களை இணைத் து கலப்பினம் உருவாக்குவதால் உள்ளூர் இனங்கள் அழிதல். 2. இயற்கை பேரழிவுகள்.**

58. பழந்திண்ணி வௌவால்களின் எண்ணிக்கைகுறைவாக காணப்படும் தென்கிழக்கு ஆசியபகுதி_____________

A) சவாமி

B) நவாமி

C) மிவாமி

**D) குவாமி**

**விளக்கம்: தென்கிழக்கு ஆசிய பகுதியான குவாமி (Gaum) யின் பழந்திண்ணி வௌவால்களின் எண்ணிக்கைக் குறைவினால், உள்ளூர் பழ உற்பத்தி வெகுவாக குறைந்திருப்பது தான் வியப்பாகும். எனவே இத்தகைய சூழலை தவிர்க்க வேண்டுமெனில், பல்வகைத்தன்மை பெருந்தேவையாய் இருக்கிறது.**

59. _____________ வாழிட அழிவிற்கு மிகச் சரியான எடுத்துக்காட்டாகும்.

A) வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகள்

B) வெப்ப மண்டல வறண்ட காடுகள்

C) வெப்ப மண்டல முட்புதர் காடுகள்

**D) வெப்ப மண்டல மழைக்காடுகள்**

**விளக்கம்: வெப்ப மண்டல மழைக்காடுகள் இத்தகைய வாழிட அழிவிற்கு மிகச் சரியான எடுத்துக்காட்டாகும்.**

60. பூமியின் நிலப்பரப்பில்_____________ வெப்பமண்டல காடுகளின் பரப்பு ஆகும்.

A) 15%

B) 16%

**C) 14%**

D) 17%

**விளக்கம்: பூமியின் நிலப்பரப்பில் 14% கொண்டிருந்த வெப்பமண்டல காடுகளின் பரப்பு தற்போது 6% கூட இல்லை.**

61. "புவிக்கோளின் நுரையீரல்" _____________

A) வெப்ப மண்டல மழைக்காடுகள்

**B) அமேசான் மழைக்காடுகள்**

C) அல்பைன் மழைக்காடுகள்

D) சதுப்புநில மழைக்காடுகள்

**விளக்கம்: "புவிக்கோளின் நுரையீரல்" (Lungs of the planet) என அழைக்கப்ப ட்ட பரந்து விரிந்த அமேசான் மழைக்காடுகள் பத்து லட்சத்திற்கும் அதிகமான உயிரினங்களின் அடைக்கலமாக திகழ்ந்தது. ஆனால், தற்போது வேளாண்மை மற்றும் மனித குடியிருப்புகளுக்காக பல பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன.**

62. கூற்று(A): உயிரினங்கள் வாழும்ஒரு பெரிய தொடர்ச்சியான நிலப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.

காரணம்(R): இதற்கு மிகை பயன்பாடு என்று பெயர்.

A) A தவறு ஆனால் R சரி

**B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல**

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

**விளக்கம்: உயிரினங்கள் வாழும்ஒரு பெரிய தொடர்ச்சியான நிலப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறு பகுதிகளாகப் பிரித்தல் "வாழிடம் துண்டாடப்படுதல்" எனப்படும்.**

63. வாழிடங்கள் எவற்றால் துண்டாக்கப்படுகின்றன?

A) பழத்தோட்டங்கள்

B) மலைத்தோட்டங்கள்

C) நகர்ப்புற குடியிருப்புகள் அமைத்தல்

**D) இவை அனைத்தும்**

**விளக்கம்: காட்டு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுதல், பழத்தோட்டங்கள், மலைத்தோட்டங்கள், நகர்ப்புற குடியிருப்புகள் அமைத்தல், தொழிற்பேட்டைகள்,விளைபொருட்களைஎடுத்து செல்லவழித்தடங்கள் அமைத்தல் ஆகிய நிகழ்வுகளால் வாழிடங்கள் துண்டாடப்படுகின்றன.**

64. மனிதனின்அதீத பயன்பாட்டால் மரபற்றுப்போன இனங்கள் யாவை?

A) டோடோ

B) பயணிகள் புறா

C) ஸ்டெல்லரின் கடல்பசு

**D) இவை அனைத்தும்**

**விளக்கம்: டோடோ, பயணிகள் புறா, ஸ்டெல்லரின் கடல்பசு ஆகியவை கடந்த 200–300 ஆண்டுகளின் மனிதனின் அதீத பயன்பாட்டால் மரபற்றுப்போன இனங்களில் சிலவாகும்.**

65. உயிரினங்களின் அழிவிற்கு இரண்டா வது முக்கிய காரணி ____________

A) மிகை பயன்பாடு

B) உலகளாவிய தட்பவெப்பநிலை மாற்றம்

C) வாழிடங்க ள் துண்டாடப்படுதல்

**D) அயல்நாட்டு இனங்களின் உள்ளேற்றம்**

**விளக்கம்: உயிரினங்களின் அழிவிற்கு இரண்டாவது முக்கிய காரணியாக அந்நிய இனங்கள் கருதப்படுகிறது.**

66. 1952 இல் தென்னாப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரையிலிருந்து கொண்டு வரப்பட்ட அதிக உற்பத்தித்திறனுடைய மீன்கள் ____________

A) பன்கிஸ் டூபியஸ்

B) லேபியோ கோண்டியஸ்

C) நைல்பெர்ச்

**D) திலேப்பியா**

**விளக்கம்: 1952 இல் தென்னாப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரையிலிருந்து கொண்டு வரப்பட்ட அதிக உற்பத்தித்திறனுடைய மீன்கள் திலேப்பியா (ஜிலேபி கெண்டை – ஒரியோகுரோமிஸ் மொசாம்பிகஸ்)**

67. கேரளாவின் உள்ளூர்இன மீன்கள்_____________

A) நைல்பெர்ச்

B) பன்கிஸ் டூபியஸ்

C) லேபியோ கோண்டியஸ்

**D) B மற்றும் C**

**விளக்கம்: கேரளாவின் உள்ளூர் நீர்நிலைகளை திலேப்பியா மீன்கள் ஆக்கிரமித்ததின் விளைவாக உள்ளூர் இனங்களான பன்கிஸ் டூபியஸ் (Punkius dubius) மற்றும் லேபியோ கோண்டியஸ் (Labeo kontius) போன்ற மீன்கள், அப்பகுதியில் விரைவில் அழியும் நிலையில் உள்ளன.**

68. நைல்பெர்ச் என்ற கொண்றுன்னி மீனை தெற்கு ஆப்பிரிக்காவில் விக்டோரியா ஏரியில் அறிமுகப்படுத்தியதன் விளைவாக அழிந்துவிட்ட மீன் இனம்_____________

A) மார்ஜினேட்டஸ்

B) பாராகாக்கஸ்

**C) சிச்லிட்**

D) டூபியஸ்

**விளக்கம்: நைல்பெர்ச் (Nile perch) என்ற கொண்றுன்னி மீனை தெற்கு ஆப்பிரிக்காவில் விக்டோரியா ஏரியில் அறிமுகப்படுத்தியதன் விளைவாக சுற்றுசூழல் தனித்துவம் வாய்ந்த இயற்கையான 200க்கும் மேற்பட்ட சில சிச்லிட் மீன் இனம் அழிந்துவிட்டது.**

69. மெக்ஸிகோ மற்றும் மத்திய அமெரிக்காவை வாழிடமாக கொண்ட பப்பாளி மாவுப்பூச்சி_____________

A) பாராகாடூபியஸ்

B) பன்கிஸ் கோண்டியஸ்

C) நைல்பெர்ச் கோண்டியஸ்

**D) பாராகாக்கஸ் மார்ஜினேட்டஸ்**

**விளக்கம்: மெக்ஸிகோ மற்றும் மத்திய அமெரிக்காவை வாழிடமாக கொண்ட பப்பாளி மாவுப்பூச்சியான பாராகாக்கஸ் மார்ஜினேட்டஸ் (Paracoccus marginators), இந்தியாவில் அசாம், மேற்கு வங்கம் மற்றும் தமிழ்நாட்டில் பப்பாளி பயிர்களில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுத்தியதாக நம்பப்படுகிறது.**

70. தட்பவெப்பநிலை மாற்றத்திற்கான முக்கிய காரணி_____________

A) மிகை பயன்பாடு

B) உலகளாவிய தட்பவெப்பநிலை மாற்றம்

C) வாழிடங்க ள் துண்டாடப்படுதல்

**D) தொழில்மயமாக்கம்**

**விளக்கம்: தட்பவெப்பநிலை மாற்றத்திற்கான முக்கிய காரணியான தொழில்மயமாக்கம் உயிரியப் பல்வகைத்தன்மைக்கு மிகுந்த அச்சுறுத்தலாக விளங்குகிறது.**

71. கூற்று(A): தட்பவெப்பநிலை மாற்றத்தின் காரணமாக நிலம் மற்றும் கடலின் வெப்ப நிலை உயர்ந்து மழைப்பொழிவின் முறைகளை மாற்றுகின்றன.

காரணம்(R): இதனால் பனிப்பாறைகள் உருகுதல், வெள்ளப்பெருக்கு வானிலை நிலவரத்தை கணிக்க இயலாமை ஆகியவை ஏற்படுகின்றன.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: தட்பவெப்பநிலை மாற்றத்தின் காரணமாக நிலம் மற்றும் கடலின் வெப்ப நிலை உயர்ந்து மழைப்பொழிவின் முறைகளை மாற்றுகின்றன. இதனால் பனிப்பாறைகள் உருகுதல், வெள்ளப்பெருக்கு வானிலை நிலவரத்தை கணிக்க இயலாமை, மிக அதிக வெப்பம் மற்றும் குடல் நோய்கள் பரவுதல், விலங்குகளின் இடப்பெயர்வு மற்றும் வனங்களில் மரங்கள் இழப்பு ஆகியவை ஏற்படுகின்றன.**

72. இடம் மாறும் வேளாண்மை _____________ பகுதியில் நடைமுறையில் உள்ளது.

**A) வடகிழக்கு இந்திய**

B) வடமேற்கு இந்திய

C) தென்கிழக்கு இந்திய

D) தென்மேற்கு இந்திய

**விளக்கம்: இடம் மாறும் வேளாண்மை வடகிழக்கு இந்தியப் பகுதியில் நடைமுறையில் உள்ளது.**

73. கூற்று(A): இயற்கையான மரங்களை கொண்ட வனங்களை எரித்து சுத்தம் செய்து 2–3 பருவத்திற்கு பயிர் சாகுபடி செய்தபின் மண் வளம் குறைந்து இனி பயிர் உற்பத்தியில் அதிக லாபம் ஈட்ட முடியாத நிலை வந்தவுடன் அந்த நிலங்களை கைவிட்டு விட்டு வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து அங்கு ஒரு புதிய இடத்தை தேர்வு செய்து மீண்டும் பயிர் உற்பத்திக்கு மரங்களை வெட்டி எரித்து நிலத்தை தயார் படுத்துவர்.

காரணம்(R): இதுவே இடம் மாறும் வேளாண்மை எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

**B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல**

C) A மற்றும் R தவறு

D) A சரி மற்றும் R சரியான விளக்கம்

**விளக்கம்: இயற்கையான மரங்களை கொண்ட வனங்களை எரித்து சுத்தம் செய்து 2–3 பருவத்திற்கு பயிர் சாகுபடி செய்தபின் மண் வளம் குறைந்து இனி பயிர் உற்பத்தியில் அதிக லாபம் ஈட்ட முடியாத நிலை வந்தவுடன் அந்த நிலங்களை கைவிட்டு விட்டு வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து அங்கு ஒரு புதிய இடத்தை தேர்வு செய்து மீண்டும் பயிர் உற்பத்திக்கு மரங்களை வெட்டி எரித்து நிலத்தை தயார்படுத்துவர். இதுவே இடம் மாறும் வேளாண்மை எனப்படும்.**

74. கூற்று(A): ஒரு இனம் மரபற்று போவதனால் அதைச் சார்ந்த மற்றொரு இனமும் மரபற்றுப் போகும்.

காரணம்(R): இதனை இணை மரபற்றுபோதல் என்கிறோம்

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: இணை மரபற்றுபோதல் என்பது ஒரு இனம் மரபற்று போவதனால் அதைச் சார்ந்த மற்றொரு இனமும் மரபற்றுப் போதலாகும்.**

75. ஆர்க்கிட் தேனீக்கள் எவற்றிற்கு எடுத்துக்காட்டு____________

A) மிகை பயன்பாடு

B) உலகளாவிய தட்பவெப்பநிலை மாற்றம்

C) வாழிடங்க ள் துண்டாடப்படுதல்

**D) இணை மரபற்றுபோதல்**

**விளக்கம்: இணை மரபற்றுபோதலுக்கு எடுத்துக்காட்டு ஆர்க்கிட் தேனீக்கள் மற்றும் வனத்தின் மரங்கள்.**

76. கல்வாரியா மரம் தன் வாழ்க்கை சுழற்சியை நிறைவு செய்ய____________ பறவையை சார்ந்துள்ளது.

**A) டோடோ**

B) பயணிகள் புறா

C) ஸ்டெல்லரின் கடல்பசு

D) ஸ்டெல்லரின் புறா

**விளக்கம்: கல்வாரியா மரம் தன் வாழ்க்கை சுழற்சியை நிறைவு செய்ய டோடோ பறவையை சார்ந்துள்ளது.**

77. கூற்று(A): அசாதாரணமான மற்றும் துரிதமான வாழிட மாறுபாட்டு இழப்புகளைச் சந்திக்கும் உள்ளூர் சிற்றினங்களை அதிகமாகக் கொண்ட நிலப்பரப்பு காணப்படுகிறது.

காரணம்(R): இவை அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதி எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: அசாதாரணமான மற்றும் துரிதமான வாழிட மாறுபாட்டு இழப்புகளைச் சந்திக்கும் உள்ளூர் சிற்றினங்களை அதிகமாகக் கொண்ட நிலப்பரப்பு அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதி (Hotspot) எனப்படும்.**

78. அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதி மனித செயல்பாடுகளால் குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதிக்கப்பட் டு மாற்றியமைக்கப்பட்ட பகுதி என்று வரையறுத்தவர் _____________

A) ஸ்டீபன் மையர்ஸ்

B) நார்மன் கார்லின்

**C) நார்மன் மையர்ஸ்**

D) நீல்ஸ் கார்லின்

**விளக்கம்: நார்மன் மையர்ஸ் (Norman myers) என்பவர் அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதி தனித்தன்மையுடைய உள்ளூர் உயிரினங்களின் பல்வகைத்தன்மையை அதிகமாகக் கொண்ட, அதே நேரத்தில் மனித செயல்பாடுகளால் குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதிக்கப்பட் டு மாற்றியமைக்கப்பட்ட பகுதி என்று வரையறுத்தார்.**

79. உலகில்_____________ உயிரியப் பல்வகைத்தன்மை அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதிக்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

A) 36

B) 37

**C) 35**

D) 38

**விளக்கம்: உலகில் 35 உயிரியப் பல்வகைத்தன்மை அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதிக்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.**

80. _____________ என்பது மரபணு பொருட்களை பாதுகாக்கும் ஒரு உயிர் களஞ்சியமாகும்.

A) மரபணு கழகம்

B) மரபணு நிதியம்

C) மரபணு அமைப்பு

**D) மரபணுவங்கி**

**விளக்கம்: மரபணுவங்கிகள் என்பது மரபணு பொருட்களை பாதுகாக்கும் ஒரு உயிர் களஞ்சியமாகும்.**

81. கூற்று(A): தாவர அல்லது விலங்கினங்களை அவற்றுக்குரிய தளங்களிலேயே பாதுகாக்கப்படுதல்

காரணம்(R): இவை சூழல்உள் பாதுகாப்பு எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: சூழல்உள் பாதுகாப்பு: தாவர அல்லது விலங்கினங்களை அவற்றுக்குரிய தளங்களிலேயே பாதுகாக்கப்படுதல் அல்லது தாவர விலங்கின மரபணு வளங்களை இயற்கை சூழலில் பாதுகாத்தல்.**

82. சூழல் உள்ள பாதுகாப்பு யுக்திகள் அல்லாதவை எவை?

A) தேசிய பூங்காக்கள்

B) உயிர்கோள காப்பிடங்கள்

C) வனவிலங்கு புகலிடங்கள்

**D) விலங்கியல் பூங்காக்கள்**

**விளக்கம்: தேசிய பூங்காக்கள், உயிர்கோள காப்பிடங்கள், வனவிலங்கு புகலிடங்கள் ஆகியவை சூழல் உள்ள பாதுகாப்பு யுக்திகளாகும்.**

83. கூற்று(A): அழியும் நிலையிலுள்ள விலங்கு அல்லது தாவர இனங்களை தனிப்பட்ட இடங்களில் வைத்து சிறப்பாக பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு முறை

காரணம்(R): இவை சூழல்வெளி பாதுகாப்பு எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: சூழல்வெளி பாதுகாப்பு: அழியும் நிலையிலுள்ள விலங்கு அல்லது தாவர இனங்களை தனிப்பட்ட இடங்களில் வைத்து சிறப்பாக பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு முறையாகும்.**

84. சூழல் வெளி பாதுகாப்புக்கான திட்டங்கள் எவை?

A) விலங்கியல் பூங்காக்கள்

B) தாவரவியல் தோட்டங்கள்

C) வனவிலங்கு புகலிடங்கள்

**D) A மற்றும் B**

**விளக்கம்: விலங்கியல் பூங்காக்கள், தாவரவியல் தோட்டங்கள் ஆகியவை பொதுவான சூழல் வெளி பாதுகாப்புக்கான திட்டங்களாகும்.**

85. கீழ்க்கண்டவை எவ்வகையான பாதுகாப்பு என கண்டறிக?

1] இனத் தொகையை மீட்டெடுக்க உதவுதல்

2] இயற்கையான வாழிடங்களைப் நெருக்கமாக ஒத்திருக்கும் அமைப்புகளைக் கொண்டு மரபற்றுப் போவதிலிருந்து பாதுகாத்தல்.

A) சூழல் உள் பாதுகாப்பு

**B) சூழல் வெளி பாதுகாப்பு**

C) சூழல் மேல் பாதுகாப்பு

D) சூழல் கீழ் பாதுகாப்பு

**விளக்கம்: சூழல் வெளி பாதுகாப்பு: இனத் தொகையை மீட்டெடுக்க உதவுதல் அல்லது இயற்கையான வாழிடங்களைப் நெருக்கமாக ஒத்திருக்கும் அமைப்புகளைக் கொண்டு மரபற்றுப் போவதிலிருந்து பாதுகாத்தல்.**

86. கீழ்க்கண்டவை எவ்வகையான பாதுகாப்பு என கண்டறிக?

1] அழியும் நிலையில் உள்ள தாவர அல்லது விலங்கினங்களை அவற்றின் இயற்கை வாழிடங்களில் பாதுகாத்தல்

2] கொன்றுண்ணி விலங்குகளிடமிருந்து சிற்றினங்களை பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.

**A) சூழல் உள் பாதுகாப்பு**

B) சூழல் வெளி பாதுகாப்பு

C) சூழல் மேல் பாதுகாப்பு

D) சூழல் கீழ் பாதுகாப்பு

**விளக்கம்: அழியும் நிலையில் உள்ள தாவர அல்லது விலங்கினங்களை அவற்றின் இயற்கை வாழிடங்களில் பாதுகாத்தல் இம்முறையில் இயற்கை வாழிடங்களையே மீட்பது அல்லது கொன்றுண்ணி விலங்குகளிடமிருந்து சிற்றினங்களை பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.**

87. கூற்று(A): தாவரவியல் பூங்கா, விலங்கியல் பூங்கா, வனவிலங்கு சுற்றுலா பூங்கா, ஆர்போரிட்டா (மரங்கள் மற்றும் புதர்களை கொண்ட காடுகள்) ஆகியவற்றில் வன உயிரினங்கள் மற்றும் வளர்க்கப்ப டும் உயிரினங்களைச் சேகரிக்கப்படுகிறது.

காரணம்(R): இது வெளிப்புற சேகரிப்பு எனப்படும்

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: தாவரவியல் பூங்கா, விலங்கியல் பூங்கா, வனவிலங்கு சுற்றுலா பூங்கா, ஆர்போரிட்டா (மரங்கள் மற்றும் புதர்களை கொண்ட காடுகள்) ஆகியவற்றில் வன உயிரினங்கள் மற்றும் வளர்க்கப்ப டும் உயிரினங்களைச் சேகரித்தல் வெளிப்புற சேகரிப்பு எனப்படும்.**

88. இந்திய முதலை அழிவில் இருந்து காப்பாற்றப்பட்ட து எம்முறையில்?

A) சூழல் உள் பாதுகாப்பு

B) சூழல் வெளி பாதுகாப்பு

C) சூழல் மேல் பாதுகாப்பு

**D) வெளிப்புற சேகரிப்பு**

**விளக்கம்: வெளிப்புற சேகரிப்பு முறையில் இந்திய முதலை மற்றும் கங்கை டால்பின் ஆகிய இனங்கள் அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டன.**

89. பரப்பளவு அடிப்படையில் தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய விலங்கியல் பூங்காக்களில் ஒன்று

A) முதுமலை வனவிலங்கு புகலிடம்

B) இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம்

C) முண்டந்துறை வனவிலங்கு புகலிடம்

**D) அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா**

**விளக்கம்: அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா பரப்பளவு அடிப்படையில் தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய விலங்கியல் பூங்காக்களில் ஒன்றாகும்.**

90. "விலங்கியல் பூங்கா தூதுவர்" நிகழ்ச்சிஎங்கு பள்ளி குழந்தைகளுக்காக நடத்தப்படுகிறது_____________

A) முதுமலை வனவிலங்கு புகலிடம்

B) இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம்

C) முண்டந்துறை வனவிலங்கு புகலிடம்

**D) அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா**

**விளக்கம்: அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா முக்கிய நிகழ்வான "விலங்கியல் பூங்கா தூதுவர்" என்ற நிகழ்ச்சி பள்ளி குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டில் 400க்கு அதிகமான பள்ளி குழந்தைகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு "விலங்கியல் பூங்கா தூதுவர்" என பட்டம் சூட்டப்பட்டுள்ளது.**

91. ஹெர்ப்பெட்டலாஜி என்பன _____________

A) பறவை இனங்களை பற்றிய அறிவியல் பிரிவு

B) பாலூட்டிகள் பற்றிய அறிவியல் பிரிவு

C) முதுகெலும்பிகள் பற்றிய அறிவியல் பிரிவு

**D) ஊர்வன இனங்களை பற்றிய அறிவியல் பிரிவு**

**விளக்கம்: ஹெர்ப்பெட்டலாஜி: ஊர்வன இனங்களை பற்றிய அறிவியல் பிரிவு.**

92. சென்னைமுதலை பண்ணைஅறக்கட்டளை மற்றும் ஹெர்ப்பெட்டலாஜி மையம் யாரால் அமைக்கப்பட்டது?

A) ஸ்டீபன் மையர்ஸ்

B) நார்மன் கார்லின்

C) நார்மன் மையர்ஸ்

**D) ரோமுலஸ் விட்டேக்கர்**

**விளக்கம்: சென்னைமுதலை பண்ணைஅறக்கட்டளை மற்றும் ஹெர்ப்பெட்டலாஜி மையம் (ஊர்வன இனங்களை பற்றிய அறிவியல் பிரிவு) என்பது புகழ்பெற்ற ரோமுலஸ் விட்டேக்கர் மற்றும் அவருடன் ஒத்த மனநிலைக் கொண்டவர்களின் மூளையிருந்து உதித்த குழந்தையாகும்.**

93. ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் மத ரீதியான சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை_____________

A) புனித தோட்டம்

B) புனித மலர்கள்

C) புனித விலங்கு

**D) புனித மரங்கள்**

**விளக்கம்: புனித தோப்புகள் அல்லது புனித மரங்கள் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் மத ரீதியான சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை. உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களுக்கு புனித தோப்புகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை.**

94. உயிர்கோள காப்பிடங்கள் திட்டத்தை யூனெஸ்கோவின்_____________ வழிநடத்துகிறது.

A) உயிர்கோள பெட்டக பாதுகாப்பு

B) சூழ்நிலையியல் பாதுகாப்பு

C) சுற்றுசூழல் மண்டல பாதுகாப்பு

**D) மனிதன் மற்றும் உயிர்கோளத் திட்டம்**

**விளக்கம்: உயிர்கோள காப்பிடங்கள் திட்டத்தை யூனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிர்கோளத் திட்டம் (Man and Biosphere Reserve; MAB) வழிநடத்துகிறது.**

95. மனிதன் மற்றும் உயிர்கோள திட்டத்தின் அணுகுமுறையை ஆதரித்து இந்திய அரசு_____________ ல் கையொப்பமிட்டு செயல்படுத்தியது.

A) 1987

B) 1988

**C) 1986**

D) 1985

**விளக்கம்: மனிதன் மற்றும் உயிர்கோள திட்டத்தின் அணுகுமுறையை ஆதரித்து இந்திய அரசு 1986 ல் கையொப்பமிட்டு செயல்படுத்தியது.**

96. நாட்டில்_____________ உயிர்கோள காப்பிடங்கள் உள்ளன.

A) 17

B) 16

**C) 18**

D) 19

**விளக்கம்: நாட்டில் 18 உயிர்கோள காப்பிடங்கள் உள்ளன.**

97. தமிழ்நாட்டில் உள்ள உயிர்கோள காப்பிடங்கள் அல்லாதவை எவை?

A) அகத்தியர் மலை

B) நீலகிரி

C) மன்னார் வளைகுடா

**D) பிச்சாவரம்**

**விளக்கம்: அகத்தியர் மலை (கர்நாடகா–தமிழ்நாடு–கேரளா), நீலகிரி (தமிழ்நாடு–கேரளா) மற்றும் மன்னார் வளைகுடா (தமிழ்நாடு) ஆகிய உயிர்கோள காப்பிடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.**

98. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] வேடந்தாங்கல் ஏரி பறவைகள் புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1942

2] முதுமலை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1942

A) 1, 2 சரி

**B) 1 தவறு 2 சரி**

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] வேடந்தாங்கல் ஏரி பறவைகள் புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு:1936. 2] முதுமலை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1942.**

99. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] கோடியக்கரை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1967

2] இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம் (ஆனை மலை) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1976

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] கோடியக்கரை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1967. 2] இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம் (ஆனை மலை) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1976.**

100. முண்டந்துறை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு_____________

A) 1989

B) 1987

**C) 1988**

D) 1985

**விளக்கம்: முண்டந்துறை வனவிலங்கு புகலிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1988.**

101. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] வேடந்தாங்கல் ஏரி பறவைகள் புகலிடம் உள்ள மாவட்டம்: நீலகிரி

2] முதுமலை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்: காஞ்சிபுரம்

A) 1, 2 சரி

B) 1 தவறு 2 சரி

**C) 1, 2 தவறு**

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] வேடந்தாங்கல் ஏரி பறவைகள் புகலிடம் உள்ள மாவட்டம்: காஞ்சிபுரம். 2] முதுமலை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்: நீலகிரி.**

102. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] கோடியக்கரை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்: கோயம்புத்தூர்

2] இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம் (ஆனை மலை) உள்ள மாவட்டம்: கோயம்புத்தூர்

A) 1, 2 சரி

**B) 1 தவறு 2 சரி**

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] கோடியக்கரை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்: நாகப்பட்டினம். 2] இந்திராகாந்தி வனவிலங்கு புகலிடம் (ஆனை மலை) உள்ள மாவட்டம்: கோயம்புத்தூர்.**

103. முண்டந்துறை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்_____________

A) காஞ்சிபுரம்

B) நீலகிரி

C) நாகப்பட் டினம்

**D) திருநெல்வேலி**

**விளக்கம்: முண்டந்துறை வனவிலங்கு புகலிடம் உள்ள மாவட்டம்: திருநெல்வேலி.**

104. அழியும் நிலையில் உள்ள வனவிலங்குகளின் பாதுகாப்பு_____________நோக்கம்.

A) வனவிலங்கு சரணாலயம்

B) வனவிலங்கு பாதுகாப்பு

C) வனவிலங்கு பூங்கா

**D) வனவிலங்கு புகலிடம்**

**விளக்கம்: அழியும் நிலையில் உள்ள வனவிலங்குகளின் பாதுகாப்பு வனவிலங்கு புகலிடங்களின் நோக்கமாகும்.**

105. வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _____________

A) 1971

B) 1973

C) 1974

**D) 1972**

**விளக்கம்: வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம் , 1972.**

106. தற்போது இந்தியாவில் _____________ புகலிடங்கள் உள்ளன.

A) 545

**B) 544**

C) 546

D) 547

**விளக்கம்: தற்போது இந்தியாவில் உள்ள 544 புகலிடங்கள் சுமார் 1,18,918 ச.கி.மீ அளவிற்கு பரந்துள்ளன.**

107. வனவிலங்கு புகலிடம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார்_____________ ஆகும்.

A) 3.64 %

B) 3.65 %

C) 3.61 %

**D) 3.62 %**

**விளக்கம்: வனவிலங்கு புகலிடம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 3.62% ஆகும்.**

108. கூற்று(A): காட்டுவிலங்குகளும் தாவரங்களும் வேட்டையாடப்படவும் திருடப்படவும் இன்றி அடைக்கலம் பெறுகிறது.

காரணம்(R): இந்நிலப்பகுதியே வனவிலங்குப் புகலிடம் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: காட்டுவிலங்குகளும் தாவரங்களும் வேட்டையாடப்படவும் திருடப்படவும் இன்றி அடைக்கலம் பெறும் நிலப்பகுதியே வனவிலங்குப் புகலிடம் எனப்படும்.**

109. ஆசிய யானை மற்றும்இந்திய புலிகளுக்கு புகழ்பெற்றது _____________

A) கேரளாவில் உள்ள வைக்கம் வனவிலங்கு புகலிடம்

B) கேரளாவில் உள்ள மூணார் வனவிலங்கு புகலிடம்

C) கேரளாவில் உள்ள திருவனந்தபுரம் வனவிலங்கு புகலிடம்

**D) கேரளாவில் உள்ள பெரியார் வனவிலங்கு புகலிடம்**

**விளக்கம்: கேரளாவில் உள்ள பெரியார் வனவிலங்கு புகலிடம் ஆசிய யானை மற்றும்இந்திய புலிகளுக்கு புகழ்பெற்றதாகும்.**

110. இந்தியாவில்_____________ தேசிய பூங்காக்கள் அமைந்துள்ளன.

A) 105

B) 106

**C) 104**

D) 107

**விளக்கம்: இந்தியாவில் 40,501 ச.கி.மீ பரப்பில் 104 தேசிய பூங்காக்கள் அமைந்துள்ளன.**

111. தேசிய பூங்காக்கள் நாட்டின் நிலப்பரப்பில்_____________ ஆகும்.

A) 1.24 %

B) 1.25 %

C) 1.22 %

**D) 1.23 %**

**விளக்கம்: தேசிய பூங்காக்கள் நாட்டின் நிலப்பரப்பில் 1.23% ஆகும்.**

112. ஒற்றை கொம்பு காண்டாமிருகத்திற்கு என பாதுகாக்கப்பட்ட பகுதி_____________

A) கிர் தேசிய பூங்கா

B) பந்திப்பூர் தேசிய பூங்கா

C) இரவிகுளம் தேசிய பூங்கா

**D) காசிரங்கா தேசிய பூங்கா**

**விளக்கம்: அசாமில் உள்ள காசிரங்கா தேசிய பூங்கா, ஒற்றை கொம்பு காண்டாமிருகத்திற்கு என பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.**

113. தேசிய பூங்காக்கள்_____________ அறிவிக்கப்பட்ட இயற்கை வாழிடப் பகுதியாகும்.

A) மத்திய அரசு

**B) மாநில அரசு**

C) மத்திய அரசு மற்றும் மாநிலரசு

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: இது சுற்றுசூழல், தாவர, விலங்கு, புவி அமைப்பியல் (அல்லது) விலங்கின கூட்டமைப்பு போன்றவற்றிற்கான முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் என்று தேசிய பூங்காக்கள் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட இயற்கை வாழிடப் பகுதியாகும்.**

114. மாநிலத்தின் முதன்மை வன உயிரி பாதுகாவலர் அனுமதித்த நபர்களை தவிர மற்ற மனித செயல்பாடுகளுக்கு தேசிய பூங்காக்களில் அனுமதில்லை என கூறும் பகுதி_____________

A) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972, பகுதி II

**B) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972, பகுதி IV**

C) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972, பகுதி V

D) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972, பகுதி III

**விளக்கம்: வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் (Wildlife Protection Act – WPA) 1972, பகுதி IVல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி மாநிலத்தின் முதன்மை வன உயிரி பாதுகாவலர் அனுமதித்த நபர்களை தவிர மற்ற மனித செயல்பாடுகளுக்கு தேசிய பூங்காக்களில் அனுமதில்லை.**

115. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] கிண்டி தேசிய உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1977

2] மன்னார் வளைகுடா கடல்சார் உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1986

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] கிண்டி தேசிய உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1977. 2] மன்னார் வளைகுடா கடல்சார் உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 1986.**

116. முக்குர்த்தி தேசிய உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு_____________

A) 2000

**B) 2001**

C) 2002

D) 2003

**விளக்கம்: முக்குர்த்தி தேசிய உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு: 2001.**

117. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை

1] கிண்டி தேசிய உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்: சென்னை

2] மன்னார் வளைகுடா கடல்சார் உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்: ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி

**A) 1, 2 சரி**

B) 1 தவறு 2 சரி

C) 1, 2 தவறு

D) 1 சரி 2 தவறு

**விளக்கம்: 1] கிண்டி தேசிய உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்: சென்னை. 2] மன்னார் வளைகுடா கடல்சார் உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்: ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி.**

118. முக்குர்த்தி தேசிய உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்_____________

**A) நீலகிரி**

B) ராமநாதபுரம்

C) தூத்துக்குடி

D) சென்னை

**விளக்கம்: முக்குர்த்தி தேசிய உயிரியல் பூங்கா உள்ள மாவட்டம்: நீலகிரி.**

119. கீழ்க்கண்டவற்றுள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் அல்லாதவை யாவை?

A) தேசியப் பூங்காக்கள்

B) வன உயிரி புகலிடங்கள்

C) சமூக காப்பிடங்கள்

**D) வனவிலங்கு சரணாலயம்**

**விளக்கம்: தேசியப் பூங்காக்கள், வன உயிரி புகலிடங்கள், சமூக காப்பிடங்கள் மற்றும் உயிர்க்கோள காப்பிடங்கள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் அடங்கும்.**

120. இந்தியாவில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகள்_____________

A) 772

B) 773

C) 774

**D) 771**

**விளக்கம்: இந்தியாவில் 16,2,099 ச.கி.மீ பரப்பளவில் 771 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அமைந்துள்ளன.**

121. கூற்று(A): உயிரினங்களின் மரபியல் வளத்தை இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட சூழ்நிலை மண்டலங்களில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

காரணம்(R): இவை சூழல்உள் பாதுகாத்தல் ஆகும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: உயிரினங்களின் மரபியல் வளத்தை இயற்கையான அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட சூழ்நிலை மண்டலங்களில் வைத்துப் பாதுகாத்தல் சூழல்உள் பாதுகாத்தல் ஆகும்.**

122. ஸ்டாக்ஹோம் பிரகடனம் _____________

A) 1973

**B) 1972**

C) 1974

D) 1971

**விளக்கம்: ஸ்டாக்ஹோம் பிரகடனம் 1972ன் படி இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக இயற்கை வளங்களான காற்று, நீர், நிலம், தாவரங்கள் மற்றும்விலங்குகள் ஆகியவற்றை கவனத்துடன் திட்டமிட்டு மேலாண்மை செய்து இயற்கை சூழ்நிலைமண்டலங்களைப் பாதுகாக்கவேண்டும்.**

123. இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்களை தொடர்ந்து பயன்படுத்துதல் ஆகியவற்றை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் நிறுவனம்_____________

A) சர்வதேச இயற்கை பாதுகாப்பு கழகம்

B) சர்வதேச இயற்கை பாதுகாப்பு நிதியம்

C) சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கம்

**D) சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு**

**விளக்கம்: இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்களை தொடர்ந்து பயன்படுத்துதல் ஆகியவற்றை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் நிறுவனமே, சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு ஆகும்.**

124. சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு_____________

A) 1949

B) 1947

**C) 1948**

D) 1945

**விளக்கம்: சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு 1948 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் உள்ள கிளாண்ட் VDயில் (Gland VD) நிறுவப்பட்டது.**

125. அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல்_____________

A) பச்சை பட்டியல்

B) மஞ்சள் பட்டியல்

C) கருப்பு பட்டியல்

**D) சிவப்பு பட்டியல்**

**விளக்கம்: செந்தரவுப் புத்தகம் (அ) சிவப்பு தகவல் புத்தகம் அல்லது சிவப்பு பட்டியல் என்பது அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஆகும்.**

126. இயற்கை மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பிற்கான சர்வதேச கூட்டமைப்பு, _____________ என பெயர் மாற்றப்பட்டது.

A) உலக பாதுகாப்பு கழகம்

B) உலக பாதுகாப்பு நிதியம்

C) உலக பாதுகாப்பு சங்கம்

**D) உலக பாதுகாப்பு கூட்டமைப்பு**

**விளக்கம்: இயற்கை மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பிற்கான சர்வதேச கூட்டமைப்பு, உலக பாதுகாப்பு கூட்டமைப்பு (World conservation union –WCU) (மோர்கஸ் சுவிட்சர்லாந்து) என பெயர் மாற்றப்பட்டு செந்தரவுப் புத்தகத்தை பராமரிக்கிறது.**

127. சிவப்பு பட்டியல் என்ற கருத்து_____________ ஆம் ஆண்டு உருவானது.

A) 1964

B) 1965

C) 1966

**D) 1963**

**விளக்கம்: சிவப்பு பட்டியல் என்ற கருத்து 1963 ஆம் ஆண்டு உருவானது.**

128. இந்திய அரசு புலித்திட்டத்தை தொடங்கிய ஆண்டு____________

A) 1974

B) 1975

C) 1976

**D) 1973**

**விளக்கம்: நம் தேசிய விலங்கான புலியை பாதுகாக்கும் பொருட்டு 1973ல் இந்திய அரசு புலித்திட்டத்தை தொடங்கியது.**

129. 1973 ஆம் ஆண்டு____________ தேசிய பூங்காவில் புலிகள் திட்டம் தொடங்கப்பட்டது.

A) கிர் தேசிய பூங்கா

B) பந்திப்பூர் தேசிய பூங்கா

C) இரவிகுளம் தேசிய பூங்கா

**D) ஜிம் கார்பெட் தேசிய பூங்கா**

**விளக்கம்: 1973 ஆம் ஆண்டு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள ஜிம் கார்பெட் தேசிய பூங்காவில் புலிகள் திட்டம் தொடங்கப்பட்டது.**

130. வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பு____________

A) தேசிய புலிகள் காப்பக கழகம்

B) தேசிய புலிகள் காப்பக சங்கம்

C) தேசிய புலிகள் காப்பக கூட்டமைப்பு

**D) தேசிய புலிகள் காப்பக ஆணையம்**

**விளக்கம்: தேசிய புலிகள் காப்பக ஆணையம் (NTCA) என்பது வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வமான அமைப்பாகும்.**

131. இந்தியாவில் தற்போதைய புலிகளின் எண்ணிக்கை____________

A) 2222

B) 2214

C) 2215

**D) 2212**

**விளக்கம்: தேசிய புலிகள் காப்பக ஆணையம், ஜனவரி 20, 2015 அன்று வெளியிட்ட அறிக்கையில் தற்போதைய புலிகளின் எண்ணிக்கை 2,212 என குறிப்பிட்டுள்ளது.**

132. பல்வகைத்தன்மையின் இழப்பிற்கு மிக முக்கிய காரணம்____________

A) உயிரினங்கள் இடம்பெயர்வு

B) உயிரினங்கள் அழிவு

C) வாழிடமாதல்

**D) உயிரினங்கள் மரபற்று போதல்**

**விளக்கம்: பல்வகைத்தன்மையின் இழப்பிற்கு மிக முக்கிய காரணம் உயிரினங்கள் மரபற்று போவதாகும்.**

133. கூற்று(A): சுற்றுச்சூழல் மற்றும் பரிணாமத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், கொன்றுண்ணிகள் மற்றும் நோய்கள் போன்ற காரணங்களால் தற்போதுள்ள ஒரு சிற்றினம் மேம்பட்ட தகவமைப்புகளைக் கொண்ட மற்றொரு சிற்றினத்தால் மாற்றம் செய்யப்படுகிறது.

காரணம்(R): இது இயற்கை வழி மரபற்றுப்போதல் எனப்படும்.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: சுற்றுச்சூழல் மற்றும் பரிணாமத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், கொன்றுண்ணிகள் மற்றும் நோய்கள் போன்ற காரணங்களால் தற்போதுள்ள ஒரு சிற்றினம் மேம்பட்ட தகவமைப்புகளைக் கொண்ட மற்றொரு சிற்றினத்தால் மாற்றம் செய்யப்படுதல் இயற்கை வழி மரபற்றுப்போதல் எனப்படும்.**

134. மரபற்றுபோதலின் வகைகள் யாவை?

A) இயற்கை வழி மரபற்றுபோதல்

B) பெருந்திரள் மரபற்றுப்போதல்

C) மானுடசெயல்பாடுகளால் மரபற்றுப் போதல்

**D) இவை அனைத்தும்**

**விளக்கம்: மரபற்றுபோதல் மூன்று வகைப்படும். 1] இயற்கை வழி மரபற்றுபோதல் 2] பெருந்திரள் மரபற்றுப்போதல் 3] மானுடசெயல்பாடுகளால் மரபற்றுப் போதல்**

135. ஹவாய் வாழ் மெல்லுடலிகள் இழப்பிற்கான அடையாளம்_____________

**A) ஜார்ஜ் என்ற மர நத்தை**

B) ஜார்ஜ் என்ற நில நத்தை

C) ஜார்ஜ் என்ற காட்டு நத்தை

D) ஜார்ஜ் என்ற நத்தை

**விளக்கம்: ஜார்ஜ் என்ற மர நத்தை (Achatinella apexfulva) ஜனவரி 1, 2019 அன்று தனது 14 வது வயதில் இறந்தது. அந்த நத்தை தான் அந்த இனத்தின் கடைசி நத்தையாகும். இது ஹவாய் வாழ் மெல்லுடலிகள் இழப்பிற்கான அடையாளமாகும்.**

136. அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதிகள் யாவை?

A) இமயமலை

B) மேற்கு தொடர்ச்சி மலைகள்

C) இந்தோ–பர்மா, அசாம் மற்றும் அந்தமான் தொகுதி தீவுகள்

**D) இவை அனைத்தும்**

**விளக்கம்: அபாயநிலை மிகை உள்ளூர் உயிரினப் பகுதிகள்: இமயமலை, மேற்கு தொடர்ச்சி மலைகள், இந்தோ–பர்மா, அசாம் மற்றும் அந்தமான் தொகுதி தீவுகள், சுந்தாலேன்ட்.**

137. பொருத்துக

உயிர்ப்புவி மண்டலங்கள் பரப்பளவு சதவீதம்

a) இமய மலைக்கு அப்பாலுள்ள மண்டலம்/ – 1] 57 %

b) இமயமலை – 2] 72%

c) இந்திய பாலைவனம் – 3] 6.9 %

d) குறை – வறட்சி மண்டலம் – 4] 15.6 %

e) மேற்கு தொடர்ச்சி மலை – 5] 4 %

a b c d e

A) 3 1 2 4 5

B) 4 1 2 5 3

**C) 1 2 3 4 5**

D) 3 4 5 1 2

138. பொருத்துக

உயிர்ப்புவி மண்டலங்கள் பரப்பளவு சதவீதம்

a) டெக்கான் தீபகற்பம் – 1] 43 %

b) கங்கை சமவெளி – 2] 11%

c) வடகிழக்கு இந்தியா – 3] 5.2 %

d) கடற்கரையோர மண்டலம் – 4] 2.5 %

e) அந்தமான்மற்றும் நிக்கோபர் தீவுகள் – 5] 0.3 %

a b c d e

A) 3 1 2 4 5

B) 4 1 2 5 3

**C) 1 2 3 4 5**

D) 3 4 5 1 2

139. கூற்று(A): வெப்ப மண்டலப் பகுதிகளில் நிலவும் சுற்றுசூழல் தன்மைகள் உயிரினங்களின் சிற்றினமாக்கல் மற்றும் பல்வகைத்தன்மைக்குச் சாதமாக உள்ளன.

காரணம்(R): பருவகாலம், தட்பவெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஏறக்குறைய நிலையாகவும் உகந்ததாகவும் உள்ளது.

A) A தவறு ஆனால் R சரி

B) A சரி ஆனால் R சரியான விளக்கமல்ல

C) A மற்றும் R தவறு

**D) A சரி மற்றும் R சரியான விளக்கம்**

**விளக்கம்: வெப்ப மண்டலப் பகுதிகளில் நிலவும் சுற்றுசூழல் தன்மைகள் உயிரினங்களின் சிற்றினமாக்கல் மற்றும் பல்வகைத்தன்மைக்குச் சாதமாக உள்ளன. பருவகாலம், தட்பவெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஏறக்குறைய நிலையாகவும் உகந்ததாகவும் உள்ளது.**

140. உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம்

A) WWF

**B) IUCN**

C) ZSI

D) UNEP

**விளக்கம்: உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம்: IUCN.**

141. தமிழ்நாட்டின் மாநில விலங்கு _____________

A) யானை

B) மான்

C) ஆடு

**D) நீலகிரி வரையாடு**

**விளக்கம்: தமிழ்நாட்டின் மாநில விலங்கு நீலகிரி வரையாடு ஆகும்.**